**OS.No.102/2013**

**நாள்:20.11.2018**

வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்திற்கான கிரய பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராதில் தாவா சொத்திற்கு நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் என் தகப்பனார் பெயரில் பட்டா வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த ஆண்டில் என் தகப்பனார் கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தார் என்பது எனக்கு ஞாபகமில்லை. எந்த அடிப்படையின் கீழ் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின்படி என் தகப்பனாருக்கு பட்டா வழங்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கான வில்லங்க சான்றிதழை எந்த காலத்திலும் பார்வையிட்டதில்லை. 1-வது அயிட்ட சொத்தானது 1-ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் கிரயம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு 13.03.1985 ஆம் தேதி 1-ம் பிரதிவாதியின் தகப்பனார் 1-ம் அயிட்ட சொத்தை கிரயம் பெற்றார் என்றால் எந்த தேதியில் கிரயம் பெறப்பட்டது என்று எனக்கு தெரியாது. 2-ம் அயிட்ட சொத்திற்கும் பத்திரம் 1-ம் பிரதிவாதியின் தந்தை பெயரில் தான் உள்ளது. 2-ம் அயிட்ட சொத்து எப்பொழுது 1-ம் பிரதிவாதியின் தந்தை கிரயம் பெற்றார் என்று தெரியாது. எனக்கு தற்போது 21 வயதாகிறது. ஆகையால் 1 மற்றும் 2-ம் அயிட்ட சொத்துக்கள் எப்போது கிரயம் பெறப்பட்டு யார் அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை பொறுத்து நானும் என் தகப்பானாரும் போலி பத்திரம் ஏற்படுத்தியதாக தருமபுரி காவல் துறையினர் ஒரு குற்றவழக்கு பதிவு செய்தனர் என்றால் சரிதான். அந்த குற்றவியல் வழக்கை மேற்கோள் காட்டி என் தகப்பனார் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார் என்றால் என் தகப்பனார் பணியிடை நீக்கம் செய்யப்பட்டது உண்மைதான். என்ன காரணத்திற்காக அவ்வாறு பணியிடை நீக்கம் செய்யப்பட்டார் என்பது எனக்கு தெரியாது- என் தகப்பனார் கிராம நிர்வாக அலுவலர் என்ற அரசு அலுவலக பணியை தவறாக பயன்படுத்தி தாவா சொத்துக்களுக்கான பட்டாவை தன் பெயரில் மோசடியாக ஏற்படுத்தினார் என்றாலும், மேலும் அதை ஊர்ஜிதம் செய்ய வா.சா.ஆ.4 பாகப்பிரிவினை பத்திரமும் மோசடியாக ஏற்படுத்தினார் என்றாலும், ஆகையினால் வா.சா.ஆ.1 பட்டாவும் வா.சா.ஆ.4 பாகப்பிரிவினை பத்திரமும் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றாலும், அந்த ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. தாவா வழக்கில் என் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றாலும், ஆகையால் அந்த ஆவணங்களின் அடிப்படையில் உரிமை கோர இயலாது என்றாலும் சரியல்ல.

ஒம்/- கே.நம்பிராஜன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பாப்பிரெட்டிப்பட்டி.